**Case No. STC. No.64/2025, Dated: 09.02.2026**

**PW–2–ஜானகி (CMP.No.721/2025–ன் படி மனு அனுமதியின் பெயரில் குறுக்கு விசாரணை)**

**(சத்தியபிரமாணம் திரு. E. கோவிந்தராஜ், Grade III Bench Clerk of this court அவர்களால் செய்யப்பட்டது).**

**(விசாரணை தொடங்கப்பட்ட நேரம் 11.47.A.M):–**

**எதிரி ஆஜர். எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–**

1. நான் 8–ம் வகுப்பு படித்துள்ளேன். சம்பவம் நடந்த தேதி என்னவென்றால் கார்த்திகை மாதம் 10 அல்லது 12–ம் தேதி 2025–ம் வருடம் ஆகும். வழக்கு சம்பவம் நடைபெற்றதனை நான் எங்கிருந்து கண்ணுற்றேன் என்றால் ஊர் மந்தையிலிருந்து பார்த்தேன். எனது வீடு மந்தையிலிருந்து எவ்வளவு தூரம் என்றால் 100 அடி இருக்கும். நான் வீட்டிலிருந்து சம்பவத்தினை பார்த்தேனா என்றால் இல்லை, எனது கணவரும் எதிரியும் சண்டை போட்டுக்கொள்வதாக கேள்வி பட்டு சம்பவ இடம் சென்று பார்த்தேன், அப்போது அங்கு எனது கணவரும் எதிரியும் சண்டை போட்டுக்கொண்டிருந்தனர்.

2. சம்பவத்தை ஊர் மக்கள் வேடிக்கை பார்த்தனரா என்றால் பார்த்தனர் சுமார் 50 பேர் வேடிக்கை பார்த்தனர். நான் சம்பவ இடத்திற்கு சென்ற பிறகு எவ்வளவு நேரம் சண்டை நடந்தது என்றால் சுமார் 1/2 மணி நேரம் நடந்தது. சம்பவம் நடந்தது குறித்து காவல் நிலையத்தில் புகார்கொடுக்க எத்தனை மணிக்கு சென்றோம் என்றால் சம்பவ நடந்த தினத்தன்று சுமார் 02.00 மணிக்கு சென்றோம். புகார் கொடுக்க எத்தனை பேர் சென்றோம் என்றால் சுமார் 10

நபர்கள் சென்றோம். புகார் கொடுத்தன் பின்னிட்டு போலீசார் விசாரணை செய்தனரா என்றால் செய்தனர். சம்பவம் குறித்து போலீசார் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து கொண்டனரா என்றால் பதிவு செய்து கொண்டனர், எத்தனை பேரிடம் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தனர் என்றால் 6 பேரிடம் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தனர்.

3. பட்டியல் சாட்சி 1 முதல் 6 சாட்சிகளையும் காவல் நிலையத்தில் வைத்து போலீசார் விசாரணை செய்தார்கள் என்றால் சரிதான். எனது கணவர் தலைச்சோலை கிராமத்தின் தலைவர் என்றால் சரிதான், அண்ணாமலையால் கோவில் கமிட்டி தலைவர் என்றால் சரிதான். எனது கணவர் மீதும், கோவில் கமிட்டியின் மீதும் எதிரியை ஊரைவிட்டு ஒதுக்கிவைத்தது சம்மந்தமாகவும், கோவில் பணத்தினை முறைகேடாக பயன்படுத்தியது தொடர்பாக புகார் கொடுத்துள்ளாரா என்றால் சரிதான். எதிரி எனது கணவரை நெஞ்சின் மீது எட்டி உதைத்தது சம்மந்தமாக சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோமா என்றால் இல்லை. எனது மாமியார் பாப்பு சம்பவம் நடந்ததாக கேள்விபட்டு சம்பவ இடத்திற்கு பார்க்க வந்தார் என்றால் சரிதான்.

4. எதிரி எனது கணவர் மீதும், கோவில் கமிட்டியார் மீதும் புகார் கொடுத்தன் சம்மந்தமாக RDO அலுவலகத்தில் விசாரணை நிலுவையில் இருப்பதால் எதிரியை மிரட்டி பணியவைக்கும் நோக்கத்திலேயே இந்த புகார் எதிரியின் மீது பொய்யாக கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சொன்ன

தேதியில், சொன்ன நேரத்தில் வழக்கு சம்பவம் நடைபெறவில்லை என்றும், எதிரி சம்பவம் நடந்த தேதியன்று ஊரில் இல்லை என்றால் சரியல்ல.

**(குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது)**

**<u>(விசாரணை முடிக்கப்பட்ட நேரம் 12.01.P.M.):-</u>**

Taken down by me in open court in the presence of the Accused. Read over to the witness and admitted by him/her to be correct.

R ELANCHEZHIAN

Digitally signed by R ELANCHEZHIAN
Date: 2026.02.09 12:03:43 +0530

District Munsif-cum-Judicial Magistrate,
Yercaud.